தமிழா வழிபடு!

தமிழில் வழிபடு!




தமிழ்த்தாய்

உலகத் தமிழ் ஆர்வலர்களே! யாவரும் கேளீர்!

# உலகத் தமிழ் ஆர்வலர்களே! யாவரும் கேளீர்!

## தமிழிசை வளர்ச்சி – தமிழ் வழிபாடு – தெய்வத்தமிழ்ப் பணி என தொய்வின்றி பணி பல ஆற்றிவரும்

## தெய்வத்தமிழ் அறக்கட்டளை

### 1. தமிழின் ஆற்றல்

- ⋆ தமிழ் ஒன்றே **'தெய்வம்'** என்ற அடைமொழி உடைய ஒரே உலக மொழி
- ⋆ தமிழ் ஒன்றே **இறை பேரின்பத்தை** எளிதாக அளிக்க வல்லது என்கிறார் வள்ளலார்
- ⋆ **'செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு'** என்கிறார் திருமூலர்
- ⋆ ஓம் என்ற ஓங்காரத்தின் பொருளை முருகப்பெருமான் சிவபெருமானுக்கு கொஞ்சு தமிழால் விரித்து உரைத்தான் என்பது வரலாறு.
  **('கொன்றைச் சடையர்கு ஒன்றைத் தெரியக் கொஞ்சித்தமிழிற் பகர்வோனே! – திருப்புகழ்)**
- ⋆ முத்தியை, ஞானத்தை, முத்தமிழ் ஓசையை என்று **இறைவனே முத்தமிழ் ஓசையாக** உள்ளார் என்று திருமூலர் திருமந்திரத்தில் எடுத்துக்காட்டுகிறார்.

### 2. அறக்கட்டளையின் வழிபாட்டில் பணி

- ⋆ அனைத்து வழிபாடுகளும் பன்னெடுங் காலம் தொட்டே (சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு) நமது தமிழில் இருந்தன என அப்பரும், திருஞானசம்பந்தரும் சான்று பகர்கின்றனர்.

  **(உ.ம்) 'செந்தமிழர் தெய்வமறை நாவர்; ஊறும் இன்தமிழால்**
  **உயர்ந்தார் தொழுதேத்தும் தில்லை' – திருஞானசம்பந்தர்**

  **(உ.ம்) 'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' – அப்பர்**
- ⋆ இடையில் **கிபி 1200 ஆம் ஆண்டு** இது முற்றிலுமாக மாற்றப்பட்டு விட்டது என்று நீதியரசர் மகராசன் தலைமையிலான குழு ஒன்று அமைத்து தமிழக அரசு உறுதி செய்தது.
- ⋆ இப்படி தடைப்பட்ட தமிழ் வழிபாடு இன்று தெய்வத் தமிழ் அறக்கட்டளை வாயிலாக மீட்டு உருவாக்கம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக பல கிரியை நூல்கள் இப்போது வெளியிடப்பட்டுள்ளன.

- ⋆ வழிபாட்டில் மீண்டும் பண்டுபோல் தமிழ் மந்திரங்கள் ஒலிக்க, தமிழ்நாட்டின் புகழ்பெற்ற எஸ்ஆர்எம் பல்கலைக் கழகத்தின் (SRM University) **வழி ஓராண்டு தமிழ் ஆகமப் படி தமிழ் அர்ச்சகர் பட்டய பயிற்சி நல்கி வருகிறது** தெய்வத்தமிழ் அறக்கட்டளை.

- ⋆ எங்கள் அறக்கட்டளையின் தலைவர் செந்தமிழ் வேள்விச் சதுரர் **முதுமுனைவர் மு.பெ. சத்தியவேல் முருகனாரின்** சீரிய தலைமையில் இதுவரை **1670** குடமுழுக்குகள், **6700** திருமுறை தமிழ் திருமணங்கள் உலகெங்கிலும் நடந்துள்ளன. மேலும் பணிகள் தொடர்கின்றன.

## 3. வேதங்கள் வெளியீடு

- ⋆ வேதம் என்பது தூய தமிழ்ச்சொல். நமது நால் வேதங்களும் பண்டைய நால் மறையான **அறம், பொருள், இன்பம், வீடு** என்பதே. இதை நமது சங்க நூல்களும், இரண்டாம் தமிழ் சங்க நூல்களும் விரிவாகக் கூறுகின்றன.

- ⋆ அற்புதமாக நமது நான்கு வேதங்களை பற்றி
  மாணிக்கவாசகர் தெளிவாக கூறுகிறார்.
  **அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கினையும்**
  **இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடி.**

- ⋆ இத்தகைய நமது பழமையான வேதத்தை தெய்வத் தமிழ் அறக்கட்டளை மீட்டு உருவாக்கம் செய்து நமது நான்மறை ஆகிய **அறத்தமிழ் வேதம், பொருட்டமிழ் வேதம், இன்பத்தமிழ் வேதம், வீட்டியல் வேதம்** என்று வரிசையாக வெளியிட்டு தமிழுக்கு மிகப்பெரிய ஒரு கொடையாக அளித்து வருகிறது. எங்களது வெளியீட்டான "தமிழரின் வேதம் எது? ஆகமம் எது?" என்ற நூலில் விரிவாக அறியலாம்.

- ⋆ இதைப் போன்று தமிழ் ஆகம நூல்களும் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. அறக்கட்டளையின் தலைவர் இதுவரை 122 நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ளார். **இதன் மூலம் உலகெங்கிலுமாக 3500 சீடர்களை உருவாக்கியுள்ளார்.**

## 4. அறக்கட்டளையின் ஆகம கோயில் நிறுவும் பணி

- ⋆ **மேற்கொள்ளும் தமிழ்ப் பணிகளின் சிகரமாக நமக்கே சொந்தமாக ஒரு ஆகம கோயிலை ஞான பாதத்தின்படி சென்னை நகரத்தில் மையப்பகுதியில் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

- ★ அருந்தமிழ் ஆகம வழிபாடு இக்கோயிலில் முற்றிலும் பின்பற்றப்படும்.
- ★ அக்கோயிலில் ஒலிக்கும் மணியின் ஒலி வான்வழியெங்கும் தமிழ் மந்திர ஒளியைப் பரப்பும்.
- ★ இப்பணி சிறக்க அன்பர்கள் அனைவரும் பொன்னாலும் பொருளாலும் தங்களால் இயன்ற நெஞ்சார்ந்த நன்கொடையை நல்க வேண்டுகிறோம்
- ★ வராது வந்த மாமணி போல் தேறாதாரையும் தெளிவித்து வீறார்ந்த வண்டமிழை ஒல்லும் வாயெல்லாம் ஓவாது பரப்பி வருவது இத்தெய்வத் தமிழ் அறக்கட்டளை !
- ★ உலகெங்கணும் படர்ந்தும் அடர்ந்தும் வாழ்கின்ற தண்டமிழ் ஆர்வலர்கள் பண்டைய பண்பாட்டு ஒளி பரப்ப அறக்கட்டளையை அணுகி, தனித் தமிழ் ஆகமப் பயிற்சி பெற இனித்த அன்புடன் வேண்டுகிறோம்.
- ★ அறக்கட்டளையின் அரிய பணிகளுக்கும் அருந்தமிழ்த் தொண்டுகளுக்கும் உங்களின் புகழ் பொருந்திய பொருட் கொடைகள் வரவேற்கப்படுகின்றன.
- ★ நூல்கள் பெறவும் அறக்கட்டளையின் பணிகள் குறித்த விவரங்கள் பெறவும் எங்கள் இணையதளத்தை அருள்கூர்ந்து பார்வையிட வேண்டுகிறோம்.

---

தொடர்புக்கு:




**தெய்வத் தமிழ் அறக்கட்டளை**

தலைவர்

முதுமுனைவர் **மு.பெ.சத்தியவேல் முருகனார்**

**9/1 மாஞ்சோலை முதல் தெரு**
**கலைமகள் நகர், ஈக்காடுதாங்கல்**
**சென்னை – 600032.**

செந்தமிழ் ஆகம அந்தணர்

**திரு.பா.கந்தசாமி**

+91 9445103775, +91 9444903286

editor@dheivamurasu.org

Pay Online www.dheivamurasu.org / www.archakar.com / www.vedham.in

tamizharchakar dheivamurasu

தமிழரின் வேதம் எது? ஆகமம் எது?

அறத்தமிழ் வேதம்


பொருட்டமிழ் வேதம்


இன்பத் தமிழ் வேதம்












பண்டிகைகளை
தமிழால் வழிபடுவோம் (10 நூல்கள்)

கருவறை முதல் கல்லறை வரை
16 விதமான வாழ்வியல் சடங்குகளை
தமிழில் ஆற்றலாம்































குறுந்தகடுகள்

சைவ வைணவ
தமிழ்ப் போற்றி நூற்றிரட்டு
120 விதமான போற்றித் தொகுப்பு

திருக்கோயில்
குடமுழுக்குகள்
(தமிழில்)

தெய்வமுரசு
நற்றமிழ் நாட்காட்டி



